**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 169/2024**
**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர்.திரு.தினேஷ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of June 24th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எலும்பு முறிவு பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.05.2018ம் தேதியன்று இரவு 08.30 மணியளவில் நான் பணியில் இருந்தபோது, இராஜேஸ்வரி, க/பெ.கருணாகரன் என்ற 42 வயது பெண்மணி சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவரை, அவரது கணவர் கருணாகரன் அழைத்து வந்திருந்தார். அவர் தன்னை 3 மணியளவில் சங்கரன்கோவிலில் வைத்து உறவினர்கள் தாக்கியதாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து, பரிசோதித்து பார்த்ததில் அதிக இரத்த இழப்பு காரணத்தினால் அதிர்ச்சியில் இருந்தார். அவரது 2 கைகளும் முழங்கைக்கு மேல் பலமுறை வெட்டப்பட்டிருந்தன. 2 பக்கமும் எலும்பு வெளியே தெரிந்து கொண்டிருந்தது. மேலும், 2 கைகளும்

முழங்கைக்கு மேல் தோல் பகுதி மட்டும் ஒட்டியிருந்தது. இவருக்கு 4 பாட்டில்கள் இரத்தம் செலுத்தி, அவரது உடல்நிலை சீர் செய்தபின், அவரது 2 கைகளும் முழங்கைக்கு மேல் அறுவை சிகிச்சை செய்து அகற்றப்பட்டன. மேலும், 14.06.2018 ம் தேதியன்று அவரின் 2 கைகளுக்கும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, தோல் மூடப்பட்டது. அவர் 22.06.2018 ம் தேதியன்று மருத்துவக்கல்லூரியிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று அளித்தேன். நான் வழங்கிய சிகிச்சை விபரக் குறிப்பு – **அ.சா.ஆ.5**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

சிகிச்சைக்கு வந்த இராஜேஸ்வரிக்கு விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு எண்.0210888 என்றால் சரிதான். போலீசார் விசாரணையின் போது, என்னிடமிருந்து விபத்து பதிவேட்டின் நகலை கைப்பற்றினார்கள் என்றால் அவர்கள் விபத்து பதிவேட்டின் நகலை பெறவில்லை. 3 நகல்களும் அவ்வாறே உள்ளது. போலீசார் விசாரிக்கும் போது, காயம்பட்ட இராஜேஸ்வரி தன்னை சங்கரன்கோவிலில் வைத்து உறவினர்கள் தாக்கியதாக கூறிய விபரத்தை போலீசாரிடம் கூறினேன். போலீசார் விசாரிக்கும் போது, காயம்பட்ட இராஜேஸ்வரிக்கு 2 கை முழங்கைகளுக்கு மேலும் பல்வேறு வெட்டுக்காயங்கள் ஏற்பட்டு, எலும்பு வெளியே தெரிந்தவாறு தோல் மட்டும் ஒட்டிக்கொண்டிருந்தது என்ற விபரத்தை கூறினேனா? என்று எனக்கு நியாபகமில்லை. நான் வழங்கிய சிகிச்சை விபர குறிப்புகள் காயம்பட்டவருக்கு 2 கை முழங்கைகளுக்கு மேலும் பல்வேறு வெட்டுக்காயங்கள் ஏற்பட்டு எலும்பு வெளியே தெரிந்தவாறு தோல் மட்டும் ஒட்டிக் கொண்டிருந்தது என்ற விபரத்தை நான்

கூறவில்லை என்றால் சரிதான். ஆனால், இந்த விபரங்கள் அனைத்தும் கேஸ் சீட்டில் உள்ளது. கேஸ் சீட்டை ஆய்வாளர் பார்வையிட்டு, அதை கைப்பற்றவில்லை. கேஸ் சீட்டில் தான் 29.05.2018ம் தேதி முதல் 22.06.2018ம் தேதி வரை காயம்பட்டவருக்கு என்னென்ன சிகிச்சை அளிக்கப்பட்டது, அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் யார் போன்ற விபரங்கள் இருக்கும் என்றால் சரிதான். இராஜேஸ்வரிக்கு 29.05.2018ம் தேதி முதல் 14.06.2018ம் தேதி வரை வேஸ்குலார் சர்ஜன் சிகிச்சை அளித்தாரா? என்றால் அவர் சிகிச்சை அளிக்கவில்லை. மருத்துவமனையில் வேஸ்குலார் சர்ஜன் கிடையாது. 2018ம் ஆண்டு வேஸ்குலார் சர்ஜன் பிரிவு திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செயல்படவில்லை என்றால் சரிதான். 2018ம் ஆண்டு காலக்கட்டத்தில் வேஸ்குலார் தொடர்பான சிகிச்சைக்கு மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டது என்றால் சரிதான். நான் வழங்கிய சிகிச்சை விபர குறிப்பில் நான் காயம்பட்டவருக்கு சிகிச்சை வழங்கியதாக எங்கும் குறிப்பிடவில்லை என்றால் அதில் DAOS என்று குறிப்பிடப்பட்டிருப்பது நான் சிகிச்சை வழங்கியதை குறிப்பிடும். DAOS என்பது நான் சிகிச்சை வழங்கியதை குறிப்பிடாது என்றும், ஒட்டுமொத்தமான சிகிச்சை பதிவேடுகள் தான் எந்தெந்த மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சை வழங்கினார்கள் என்பதை பொறுத்து உறுதியாக துலங்கும் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் இராஜேஸ்வரிக்கு ஏற்பட்டதாக கூறப்படும் காயங்கள் குறித்து கூறியவை உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. இராஜேஸ்வரிக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படவேண்டிய காயங்கள் அல்ல என்றும், அவை வாஸ்குலார் நிபுணர் தான் சிகிச்சை

அளித்திருக்க வேண்டும் என்றும், வாஸ்குலார் பிரிவில் சிகிச்சை அளித்திருந்தால் அவரது கைகளை அகற்றியிருக்க வேண்டிய தேவையில்லை என்றால் சரியல்ல.

<u>அரசு தரப்பு மறுவிசாரணை</u> –

காயம்பட்ட இராஜேஸ்வரிக்கு வழங்கிய சிகிச்சை சம்பந்தமான கேஸ் சீட்டை நான் இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். கேஸ் சீட்டுகள் – 39 தாள்கள் உடையது. அது **அ.சா.ஆ.6**. திருநெல்வேலி அரசு ஹைகிரவுண்ட் மருத்துவமனையில் பதிவு செய்து வைத்திருந்த இராஜேஸ்வரிக்கான விபத்து பதிவேடு **அ.சா.ஆ.7**. காயம்பட்ட இராஜேஸ்வரிக்கு ஏற்கனவே அதிகமான இரத்த இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், அவர் எங்கள் மருத்துவமனைக்கு சம்பவம் நடந்து ஐந்தரை மணி நேரத்திற்கு பிறகு வந்தார். இந்த நிலையில், அவரது உயிரை காப்பாற்ற வேண்டிய கட்டாயம் இருந்தது. அதற்காக அவருக்கு 4 பாட்டில்கள் இரத்தம் ஏற்றப்பட்டது. அவரை வாஸ்குலார் சிகிச்சைக்காக மதுரைக்கு அனுப்பியிருந்தால் அவரது உயிரை காப்பாற்றியிருக்க முடியாது. மேலும், மருத்துவ விதிப்படி 6 மணி நேரத்திற்கு பிறகு வெட்டுப்பட்ட கையை மீண்டும் பொருத்த வாய்ப்பில்லை.

(1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தரப்பில் அ.சா.ஆ.6 புதிதாக மறுவிசாரணையின் போது குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த ஆவணத்தை பரிசீலித்து குறுக்கு விசாரணை செய்வதற்கு கால அவகாசம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் குறுக்கு விசாரணைக்காக இந்த வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.06.24 16:29:45 +0530